31. 1982 ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக் கழகச் சட்டமுன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 9/1982).

32. 1982 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா தொழில் நுட்ப வியல் பல்கலைக் கழக (திருத்தம், தனி விதித்துறைகள்) சட்ட முன்வடிவின் நகலும இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 10/1982).

33. தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு நிவாரண நிறுவனங்கள் (சிறப்பு விதிகள்) திருத்த சட்டமுன்வடிவு சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண், 11/1982).

இணைப்பு I

232-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினாதாள் 244-க்கான விடையைக் காண்க).

விவர அறிக்கை.

ஆலய ஊழியர்களின் சம்பள விகிதம் அண்மையில் மாற்றியமைக்கப்பட்டது குறித்து:

2. துணை/உதவி ஆணையர்கள் செயல் அலுவலர்களாக உள்ள ஆலயச் சிப்பந்திகளுக்கு 1-7-1979 முதல் ரூபாய் 10 முதல் ரூபாய் 40 வரை ஊதிய உயர்வு கிடைக்கும் வகையில் திருத்தப்பட்ட சம்பள விகிதம் அனுமதிக்கப்பட்டது. அதாவது ஆலய ஊழியர்களுக்கான சம்பளம் "அந்தந்த ஆலயங்களின் மொத்த வருவாயில் 30 சதவீதத்திற்கு மிகா வண்ணம் வழங்கப் பட்டது. இதர ஆலய ஊழியர்களுக்கும் மேல் நிலை சிப்பந்திகளுக்கு மாதம் ரூ. 10 வீதம் கீழ்நிலை சிப்பந்திகளுக்கு மாதம் ரூ. 5 வீதமும் 1-7-1979 முதல் சம்பளத்தில் உயர்வு அளிக்கப் பட்டது. தற்போது ஆலயச் சிப்பந்திகள் சம்பளச் செலவு அனைத்து வருவாயில் 30 சதவீதத்திலிருந்து 40 சதவீதம் வரை உயர்த்தப்பட்டுள்ளது.

3. ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதசாமி ஆலய பணியாளர்களின் அக விலைப்படி மற்ற ஆலயங்களின் அக விலைப்படிக்கு வித்தியாசமாக இருந்ததால், அக விலைப்படியை சம்பளத்தில் சேர்த்து மீண்டும் 1–2–1980 முதல் சம்பள விகிதம் திருத்தி புதிய சம்பளப் பட்டியல் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

இராமேஸ்வரம் அருள்மிகு இராமநாதசாமி ஆலயத்தின் சிப்பந்திகள் சம்பள விகிதம் மதுரை அருள்மிகு மீனாட்சியம்மன் கோவில் பணியாளர்களுக்குக் கொடுக்கப்படும். சம்பள விகிதத்தினையொட்டி 1–2–1981 முதல் திருத்தி 28-2-1981-ல் புதிய சம்பளப்பட்டியல் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

1982 பிப்ரவரி 18]

மைலாப்பூர் அருள்மிகு கபாலீஸ்வரர் ஆலயப் பணியாளர் களுக்கு 1-7-1980 முதல் சம்பள விகிதத்தை திருத்தி அளிக்கப் பட்டுள்ளது. உதவி ஆணையர்/துணை ஆணையர் அந்தஸ்தில் செயல் அலுவலர் உள்ள ஆலயங்கள் தவிர இதர ஆலயங்களில் 1979 முதல் சுமார் 220 ஆலயங்களில் சம்பள விகிதம் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. குறைந்த பட்சம் ரூ. 5, அதிக பட்சம் ரூ. 40-ம் ஊதிய உயர்வு கிடைக்கும் வகையில் சம்பளப் பட்டியல்கள் திருத்தி அமைக்கப்பட்டுள்ளன.

1-2-1980 முதல் சிப்பந்திகள் சம்பளச் செலவு ஆலய வருமானத்தில் 30 சதவீதத்திற்குள் உள்ள எல்லா ஆலயங்களில் உள்ள ஊழியர்களுக்கும் கீழ்க்கண்ட விகிதங்களின்படி அகவிலைப் படி இந்து சமய அறநிலையத் துறை ஆணையாளர் அவர் களால் வழங்கப்பட்டுள்ளது.

அடிப்படைச் சம்பளம்.	அகவிலைப்படி நிர்ணயம்.
ரூ. 199 வரை	ரூ. 10
ரூ. 200 முதல் ரூ. 299 வரை	ரூ. 15
ரூ. 300 முதல் ரூ. 399 வரை	ரூ. 20
ரூ. 400 முதல் ரூ. 499 வரை	ரூ. 25
ரூ. 500 முதல் ரூ. 599 வரை	ரூ. 30
ரூ. 600 முதல் ரூ. 899 வரை	ரூ. 35
ரூ. 900-க்கு மேல்	ரூ. 40

மேலும், ஆலய ஊழியர்களுக்கு வீட்டு வாடகைப்படி, நகர ஈட்டுப்படி முதலியன கீழ்க்கண்டவாறு 1-2-1980 முதல் வழங்க இந்து சமய அறநிலையத் துறை ஆணையாளர் அவர்களால் உத்தரவிடப்பட்டுள்ளது.

	வீட்டு வாடகைப் படி.	நகர ஈட்டுப்படி.
மேல் நிலைப் பணியாளர்கள்	ரூ. 15	ரூ. 10
கீழ்நிலைப் பணியாளர்கள் (பாரா, திரு வலகு, மாலைகட்டி தோட்டம், காவல் கடைநிலை மற்றும் அதற்கு குறைவான அந்தஸ்தில் உள்ளவர்கள்).	ரூ. 10	ரூ. 5

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[1982 பிப்ரவரி 18

துணை மற்றும் உதவி ஆணையர் அந்தஸ்தில் செயல் அலுவலர்களாக உள்ள ஆலயங்களில் சிப்பந்திகளுக்கு 1-10-1980 முதல் கீழ்க்கண்ட விகிதப்படி அகவிலைப்படி உயர்த்தி வழங்க ஆணையரால் உத்திரவிடப்பட்டுள்ளது.

அடிப்படைச் சம்பளம்.	அகவிலைப்படி நிர்ணயம்:
ரூ. 199 வரை	ரூ. 20
ரூ. 200 முதல் ரூ. 299 வரை	ரூ. 25
ரூ. 300 முதல் ரூ. 399 வரை	ரூ. 30
ரூ. 400 முதல் ரூ. 499 வரை	ரூ. 35
ரூ. 500 முதல் ரூ. 599 வரை	ரூ. 40
ரூ, 600 முதல் ரூ. 899 வரை	ரூ. 50
ரூ. 900-க்கு மேல்,	ரூ. 60

மேலும் 1-1-1981 முதல் கிராமப்புறங்களில் வீட்டு வாடகைபபடி கிடைக்காத இடங்களில் கிராமப்படியாக ரூ. 5 வழங்க இந்து சமய அறநிலையத் துறை ஆணையரால் உத்தரவிடப்பட்டுள்ளது. இதுவரை ஆலயச் சிப்பந்திகள் சம்பளச் செலவு ஆலயத்தின் வருவாயில் 30 சதவீதமாக இருந்தது 40 சதவீதமாக உயர்த்தி இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆணையரால் உத்தரவிட்ட பின்பு 1-4-1981 முதல் உதவி ஆணையர் நிலையிலுள்ள செயல் அலுவலர் உள்ள ஆலயங்களின் பணியாளருக்கு ரூ. 650 வரை அடிப்படை சம்பளத்தில் 20 சதவீதமும் அதற்கு மேல் 15 சதவீதமும் அகவிலைப்படி வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

இதேபோல் பழனி, அருள்மிகு தண்டாயுதபாணி ாமி கோயில் பணியாளர்களுக்கும் அடிப்படைச் சம்பளத்தில் 15 சதவீதம் முதல் 20 சதவீதம் வரை 1-7-1981 முதல் அகவிலைப்படி வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

இதர ஆலயப் பணியாளர்களுக்கு 1-7-1981 முதல் ரூ. 400 மாத அடிப்படைச் சம்பளம் வாங்குபவருக்கு ரூ. 45-ம் அதற்கு மேல் ரூ. 60-ம் அகவிலைப்படி உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

மேலும், எந்த ஆலயப் பணியாளர் ஒருவரின் அடிப்படைச் சம்பளம், அகவிலைப்படி ஆகியவைகளின் மொத்தம் மாதம் ஒன்றுக்கு ரூ. 100-க்கு குறைவாக இருக்குமானால், இது குறித்து விவரங்கள் பெற்று இதனை நிவர்த்திக்க ஆணையர் தனி நடவடிக்கை எடுத்து வருகிறார்.

இவ்வாறாக அவ்வப்போது ஆலய ஊழியர்களின் கோரிக்கைகள் ஆணையரால் பரிவுடன் பரிசீலிக்கப்பட்டு நிவாரணம் வழங்கப்பட்டு வருகிறது.